DEPOSITION OF WITNESS

(Chapter X of Civil Procedure)

IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT COURT, RAMANATHAPURAM

OS. No.3/2023

Deposition of witness for plaintiff/petitioner/defendants/respondents – PW2

| | | |
|---|---|---|
| Name | : | **செல்வகுமார்** |
| Father Name | : | சுப்ரமணி |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | உதவியாளர், சார்பதிவாளர் அலுவலகம், கீழக்கரை |
| Religion | : | |
| Age | : | 37 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 25.11.2025.

**வாதி தரப்பு சாட்சி முதன்மை விசாரணை:–**

நான் தற்போது கீழக்கரை சார்பதிவாளர் அலுவலகத்தில் உதவியாளராக பணிபுரிந்து வருகிறேன். இந்நீதிமன்றத்திலிருந்து எங்கள் சார்பதிவாளருக்கு அழைப்பாணையில் கண்ட ஆவணங்களுடன் சாட்சியம் அளிக்க உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது. இன்று நான் கீழக்கரை சார்பதிவாளர் அலுவலகத்தில் கடந்த 1 மாத காலமாக பொறுப்பு சார்பதிவாளராக பணிபுரிந்து வருகிறேன். அழைப்பாணையில் 01.01.1960 – 31.12.1974 வரைக்கான தாவா சொத்து சம்மந்தப்பட்ட வில்லங்க சான்றிதலும், 03.12.1981 தேதியில் எங்கள் சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண்.1855/1981 ஆக பதிவு செய்யப்பட்டுள்ள ஆவணத்தின் பதிவு நகலை தாக்கல் செய்ய உத்தரவிடப்பட்டிருந்ததின்பேரில் அந்த ஆவணங்களை நான் தாக்கல் செய்கிறேன். வில்லங்க சான்றிதழ் **சா.சா.ஆ.1**. 03.12.1981 தேதியிட்ட கிரையப்பத்திரத்திற்கான உண்மை நகல் **சா.சா.ஆ.2**.

2, 4, 6, 7 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை :–

நான் எத்தனை மாதங்களாக கீழக்கரை சார்பதிவாளர் அலுவலகத்தில் பணிபுரிந்து வருகிறேன் என்றால் கடந்த 1 மாத காலமாக. சா.சா.ஆ.2 ஆவணம் பற்றி எனக்கு

நேரடியாக தெரியாது என்றால் சரிதான். சா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள வில்லங்க சான்றிதழில் சொத்து விவரம் இல்லை என்றால் சரிதான்.

1, 8 முதல் 10 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை:–

2, 4, 6, 7 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணையை 1, 8 முதல் 10 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் ஏற்றுக்கொள்வதாக சொன்னதால் தனியாக குறுக்கு விசாரணை இல்லை.

Sd/-சி.மோகன்ராம்,
கூடுதல் மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம்.